# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2016.03.21

**ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 08/2015(i)**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

## விசேட தரத்திற்கு மற்றும் தரம் I இற்கு தரமுயர்த்தப்பட்ட துணை மேற்பார்வையாளர்களுக்கு உரிய சேவைக் காலக் குறைப்பின் அனுகூலங்களைப் பெற்றுக்கொடுத்தல்

துணை மேற்பார்வையாளர் (முழு நேரம்) தரம் II,I மற்றும் விசேட தரப் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை சம்பந்தமான 2015.08.05 ஆம் திகதிய 08/2015 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

**2.** அனைத்துப் பல்கலைக்கழக துணை மேற்பார்வையாளர்கள் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் மீது கவனத்தைச் செலுத்திய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, 2016.02.26 ஆம் திகதி கூடிய தனது 935 ஆவது கூட்டத்தின்போது 08/2015 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ள சேவைக் காலக் குறைப்பின் அனுகூலங்களை விசேட தர மற்றும் தரம் I துணை மேற்பார்வையாளர்களுக்கு கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் பெற்றுக்கொடுப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

**2.1 துணை மேற்பார்வையாளர் (விசேட தரம்)**

அ) 08/2015 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் நிலவிய பழைய நடைமுறையின் கீழ் ஏற்கனவே பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ள துணை மேற்பார்வையாளர்களின் (விசேட தரம்) சம்பளப் படிநிலையை அவர்கள் தரம் II,I இல் 16 வருடங்களிலும் அதிகமான சேவைக் காலத்தைக் கொண்டிருப்பின் நான்கு (04) சம்பள ஏற்றங்களை பதவி உயர்வு வழங்கப்பட்ட திகதி முதல் 2014.12.31 ஆம் திகதி வரையான காலத்திற்கு சம்பள நிலுவையைச் செலுத்தாமல் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக பதவி உயர்வு தினத்திலிருந்து சீர்படுத்தல்.

ஆ) 2015.01.01 ஆம் திகதியன்று தரம் II மற்றும் I இல் 16 வருடங்களிலும் அதிகளவு ஆனாலும் 20 வருடங்களிலும் குறைவான சேவைக் காலத்தைக் கொண்டுள்ள 08/2015 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் பிரகாரம் பதவி உயர்வு வழங்கப்பட்ட துணை மேற்பார்வையாளர்களின் (விசேட தரம்) சம்பளப் படிநிலையை 16 வருடங்களிலும் அதிக சேவைக் காலத்திற்காக ஒரு வருடத்திற்கு ஒரு(01) சம்பள ஏற்றம் வீதம் பதவி உயர்வு வழங்கப்பட்ட திகதி முதல் 2014.12.31 ஆம் திகதி வரையான காலத்திற்கு சம்பள நிலுவையைச் செலுத்தாமல் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக பதவி உயர்வு தினத்திலிருந்து சீர்படுத்தல்.

**2.2. துணை மேற்பார்வையாளர் (தரம் I )**

அ) 08/2015 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் நிலவிய பழைய நடைமுறையின் கீழ் ஏற்கனவே பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ள தரம் I துணை மேற்பார்வையாளர்களின் சம்பளப் படிநிலையை அவர்கள் தரம் II இல் 06 வருடங்களிலும் அதிகமான சேவைக் காலத்தைக் கொண்டிருப்பின் ஒரு (01) சம்பள ஏற்றத்தை பதவி உயர்வு வழங்கப்பட்ட திகதி முதல் 2014.12.31 ஆம் திகதி வரையான காலத்திற்கான சம்பள நிலுவையைச் செலுத்தாமல் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக பதவி உயர்வு தினத்திலிருந்து சீர்படுத்தல்.

ஆ) பழைய நடைமுறையின் கீழ் தரம் I இற்கு பதவி உயர்வு வழங்கப்பட்ட துணை மேற்பார்வையாளர்கள், உரிய சேவைக் காலத்தினை விடவும் மேலதிகமாக ஒரு (01) வருட காலம் தரம் II இல் பணியாற்றியுள்ளதனால் அவர்களை தரம் I இல் 09 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்வதன் அடிப்படையில் அடுத்த பதவி உயர்வான விசேட தரத்திற்கு பதவி உயர்த்துதல் தொடர்பாக கவனம் செலுத்துதல்.

**3.** 2016 ஆம் ஆண்டிற்காக ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள நிதியை முகாமைத்துவப்படுத்தி இதனுடன் தொடர்பான செலவுகளை மேற்கொள்ளுமாறு உயர் கல்வி நிறுவகங்கள் / நிறுவகங்களுக்கு பணிப்புரை விடுக்கப்படுகின்றது.

4. தயவுசெய்து அதன் பிரகாரம், நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா**

**தலைவர்**

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள/ சிரேஷ்ட உதவி நூலகர்கள் / உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/3/111